## வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : **க. முனுசாமி**, M.Sc.,M.A.,B.Ed.,M.Phil.,M.B.A

ந.க.எண். 3044 / அ1 /2021 நாள். . 10 .2021

**பொருள் :** பள்ளிக் கல்வித் துறை – தமிழ்நாடு அமைச்சப்பணி – இளநிலை உதவியாளர் நேரடி நியமனம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு தொகுதி – 4 – 2018–2019 மற்றும் 2019–2020 தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு இளநிலை உதவியாளர் பணி நியமனம் ஆணை வழங்கியமை – இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் தொடர்பாக.

**பார்வை :**

1. சென்னை – 6 தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுதுணைச் செயலாளரின் கடிதம் எண் 2563 / PSD–I2 /2019 நாள் 21–07–2020
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 27629 / அ4 / இ1 / 2019 நாள் 14–09–2020
3. அரசாணை நிலை எண். 101 பள்ளிக் கல்வி (வரவு செலவுத் திட்டம் – 1 துறை நாள் 18–05–2018
4. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறை ந.க.எண் 3061/ அ1 / 2020 நாள் 18–09–2020
5. கொட்டமிட்டா அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரின் கடித ந.க.எண் 68 / 2021 நாள் 30–09–2021

.....

பார்வை 5ல் காணும் கொட்டமிட்டா அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரின் கடிதம் மூலம் பெறப்பட்ட கருத்துருவினை ஆய்வு செய்ததில் பார்வை 1ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு தொகுதி – VI – 2018–2019 மற்றும் 2019–2020 தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டு பார்வை 2ல் காணும் பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறை கடிதத்தில் தெரிவித்துள்ள அறிவுரைகளை பின்பற்றி பார்வை 4ல் காணும் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறை நியமன ஆணையின்படி திரு. வெ. பிரபாகர் என்பார் வேலூர் மாவட்டம், கொட்டமிட்டா, அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்று 21–09–2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். அன்னாரது கல்வித் சான்றுகள் உண்மைத் தன்மை பெறப்பட்டுள்ளது. கொட்டமிட்டா அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரின் பரிந்துரையின் அடிப்படையில் கீழ்க்காணும் விவரப்படி கலம் 4ல் குறிப்பிட்டுள்ள நாளில் இளநிலை உதவியாளர் பணியினை பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

Scanned with OKEN Scanner

| வ. எண் | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலக விவரம் | இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறை படுத்தும் நாள் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | திரு. வெ . பிரபாகரன், இளநிலை உதவியாளர் அரசு மேல்நிலைப் பள்ளி, கொட்டமிட்டா வேலூர் மாவட்டம் | 21-09-2020 முற்பகல் | 21-09-2020 முற்பகல் | தேர்வாணையப் பட்டியலின் வரிசை எண் 642 |

மேற்படி பணியாளருக்கு இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்ட ஆண்டு / தர எண் அடிப்படையில் முன்னரிமை அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பார்வை 5ல் காணும் பள்ளிதலைமை ஆசிரியரின் கடிதம் மற்றும் பரிந்துரையின் மூலம் பெறப்பட்ட கருத்துரு உண்மைத் தன்மை இல்லை என பின்னர் கண்டறியப்பட்டால் இவ்வாணை தானாக இரத்து செய்யப்படும் என நிபந்தனையின் பேரில் இவ்வாணை வழங்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர் இந்த செயல்முறைகளை உடனடியாக மேற்படி உரிய நபருக்கு அளிக்கப்பட வேண்டும் மற்றும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி திரு. வெ. பிரபாகரன், என்பார் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர் பணியில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார். தகுதிகாண் பருவகாலத்தில் மேற்படி பணியாளர் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது. இச்செயல்முறை பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் உடன்வழங்குமாறு சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு – அசல் பணிப்பதிவேடு

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

சார்ந்த பணியாளர் (உரிய வழியாக)

நகல்

1. இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) பள்ளிக் கல்வி ஆணையரகம் சென்னை –6 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர் தகவலுக்காக அனுப்பலாகிறது.
3. தலைமை ஆசிரியர் அரசு மேல்நிலைப் பள்ளி கொட்டாமிட்டா தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.

Scanned with OKEN Scanner